# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - புவிப்படங்களைக் கற்றறிதல் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

21 x 1 = 21

1) புவிப்பட தயாரிப்பு முறை குறித்து கையாளும் பாடப்பிரிவு _____ ஆகும்.

(அ) மக்களியல் **(ஆ) புவிப்படவியல்** (இ) இயற்கையமைப்பு (ஈ) இடவியல்

2) ஒரு பகுதியின் இயற்கையம்சங்களைக் காட்டும் புவிப்படம் _________ .

(அ) நிலக்கானிப் புவிப்படம் **(ஆ) நிலத்தோற்ற புவிப்படம்** (இ) கால நிலையியல் புவிப்படம்
(ஈ) மூலாதார புவிப்படம்

3) ஆழம் குறைந்த நீர்ப் பகுதிகள் _________ வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.

(அ) மஞ்சள் (ஆ) பழுப்பு **(இ) வெளிர் நீலம்** (ஈ) அடர் நீலம்

4) பிளான்கள் என்று அழைக்கப்படும் புவிப்படங்கள் ______ ஆகும்.

**(அ) நிலக்கானிப் புவிப்படங்கள்** (ஆ) தலப்படங்கள் (இ) சம அளவுக்கோட்டுப் படங்கள்
(ஈ) போக்குவரத்துப் படங்கள்

5) மக்கட்தொகை பரவலை _______ மூலம் காண்பிக்கலாம்.

(அ) கோடுகள் **(ஆ) வண்ணங்கள்** (இ) புள்ளிகள் (ஈ) சமஅளவுக்கோடுகள்

6) புவியியலாளர்களுக்கு ஒரு முக்கிய கருவி

**(அ) புவி வரைபடம்** (ஆ) புகைப்படம் (இ) செய்தித்தாள் (ஈ) தொலைபேசி

7) புவியின் வடிவிலான ஒரு சிறிய தோற்றம்

(அ) புவி வரைபடம் **(ஆ) புவிமாதிரி** (இ) கருத்துப்படம் (ஈ) இவற்றில் ஏதுமில்லை

8) புவிப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கம் குறித்து கூறுவது

(அ) திசைகள் (ஆ) புவிப்பட மூலம் (இ) சின்னங்கள் **(ஈ) தலைப்பு**

9) அளவுத்திட்டத்தை சொற்களால் விவரிப்பது

(அ) விகிதாச்சார முறை (ஆ) எண்சார் பின்னமுறை **(இ) வாக்கிய முறை** (ஈ) நேரியல் அளவு

10) புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவும் புவிப்பரப்பில் உள்ள தொலைவும் ஒரே அளவில் குறிப்பிடப்படும் முறை

(அ) பிரதிபின்னமுறை (ஆ) எண்சார் பின்னமுறை (இ) விகிதாச்சார முறை **(ஈ) இவை அனைத்தும்**

11)  என்ற வரைபட விளக்கம் குறிப்பது

**(அ) காடுகள்** (ஆ) நீர்நிலை (இ) கப்பி சாலை (ஈ) சுற்றுலா தளம்

12) புவிப்படங்களில் பொதுவாக மேல்நோக்கி இருக்கும்படி வரையப்படும் திசை

**(அ) வடதிசை** (ஆ) தென்திசை (இ) மேற்கு திசை (ஈ) கிழக்கு திசை

13) புவி வரைபடத்தில் ஆசிரியரின் பெயர் வெளியிடும் இடம்

(அ) மேல் இடது புறம் **(ஆ) கீழ் இடது புறம்** (இ) கீழ் வலது புறம் (ஈ) மேல் வலது புறம்

14) பேருந்து நிலையத்தை குறிக்கும் குறியீடு

(அ)  **(ஆ)**  (இ)  (ஈ) 

15) பனிபடர்ந்த உயரமான பகுதிகளைக் குறிப்பிட பயன்படுத்தப்படும் நிறம்

(அ) வெளிர் பழுப்பு (ஆ) வெளிர் பச்சை **(இ) வெள்ளை** (ஈ) வெளிர் சிவப்பு

16) புவிப்படத்தை கற்றறிதல் என்பது ___________

(அ) புவிப்படத்தில் உள்ள விவரங்களை புரிந்துகொள்ளுதல்

(ஆ) புவியியல் சார்ந்த விவரங்களை விவரணம் செய்தல்

(இ) புவியின் மனவரைபடத்தை உருவாக்கும் திறன் அடைதல் **(ஈ) இவை அனைத்தும்**

17) புவிப்படத்தின் அடிப்படை கூறுகள் ___________

(அ) தலைப்பு மற்றும் புவிப்பட அளவை (ஆ) புவிப்பட விளக்கம் மற்றும் திசைகள்

(இ) புவிப்படமூலம் மற்றும் மரபுக் குறியீடுகள் **(ஈ) இவை அனைத்தும்**

18) புவிப்படங்களில் அளவைகள் ____________ வகைப்படும்.


**(அ) மூன்று** (ஆ) நான்கு (இ) ஐந்து (ஈ) எட்டு

19) புவிப்பட மூலங்கள் புவிப்படத்தின் கீழ் ___________ புறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(அ) இடது **(ஆ) வலது** (இ) மேல் (ஈ) எதுவுமில்லை

20) சூழல் சின்னங்கள் அல்லது குறியீடுகள் என்பதை குறிப்பிட __________ முடிவு செய்யப்படும் மற்றொரு வகையாகும்.

(அ) அரசாங்கம் (ஆ) நாடுகள் **(இ) வல்லுநர்கள்** (ஈ) விஞ்ஞானிகள்

21)  - இக்குறியீடு குறிப்பது ___________

(அ) போர்க்களம் (ஆ) இருப்புப்பாதை (இ) நடைபாதை **(ஈ) பாலம்**

<u>**கோடிட்ட இடத்தை நிரப்புக**</u> 29 x 1 = 29

22) புவிக் கோள மாதிரி என்பது ______ ன் உண்மையான உருவ மாதிரியாக்கமாகும்.

**புவியின்**

23) புவியின் கோள வடிவத்தை ஒரு சமதளப்பரப்பில் வரையப்படும் முறை ______ எனப்படும்.

**வரைபட கோட்டுச்சட்டம்**

24) சம அளவு உயரமுள்ள இடங்களை இணைக்கும் கோடு______ .

**சமஅளவு கோடுகள்**

25) காணிப்படங்கள் பொதுவாக _____ ஆல் பராமரிக்கப்படுகின்றன.

**அரசாங்கத்தால்**

26) _________ புவிப்படங்கள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

**கருத்து**

27) ________ என்பது முழுப்புவியையோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ ஒரு சமதளப் பரப்பில் அளவையுடன் பதிலீட்டுக் காட்டும் ஒரு முறையாகும்.

**புவிப்படம்**

28) புவிக்கோள மாதிரியானது புவியை _________ பரிமாணத்தில் சித்தரிக்கின்றது.

**முப்பரிமாணத்தில்**

29) ________ என்பது புவிப்பட உருவாக்குதலின் அறிவியல் சார்ந்த ஒரு கலை நுட்பமாகும்.

**புவிப்படவியல்**

30) _________ என்பது புவிப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் புவிப்படப்பரப்பில் உள்ள தொலைவிற்கும் இடையிலான விகிதத்தை குறிப்பதாகும்.

**புவிப்பட அளவை**

31) கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய நிலப்பகுதிகளைக் காண்பிக்க __________ அளவை புகைப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**சிறிய**

32) சிறிய பகுதிகளான வட்டம் அல்லது மாவட்டம் போன்றவற்றை காண்பிக்க __________ அளவை புவிப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**பெரிய**

33) ஒரு எளிமையான வாக்கிய அளவுத் திட்டத்தில் தொகுதி அங்குலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் விகுதி __________ ல் இருக்கும்.

**மைல்களில்**

34) புவிப்படத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு குறியீடுகள் மற்றும் வண்ணங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை விளக்குவது ________ .

**திறவுவிசை**

35) பொதுவாக வரைபடத்தில் திசைகளானது ________ குறியீடுகள் மூலம் குறிக்கப்படுகின்றன.

**திசைகாட்டி**

36) கோளவடிவமான புவியை ஒரு சமதளப் பரப்பில் வரைவதற்கு பின்பற்றப்படும் ஒரு நுணுக்க முறையை ________ என்கிறோம்.

**வரைபட கோட்டுச்சட்டமாகும்**

37) புவிப்படங்களில் குறிப்பிடப்பட்டுள்ள _________ மற்றும் _______ கோடுகள் படத்தில் குறிக்கப்பட்டுள்ள பகுதியின் அமைவிட தகவல்களை அளிக்கின்றன.

**அட்ச, தீர்க்க**

38) ஒரு குறிப்பிட்ட இடத்தின் எல்லைகள் மற்றும் நில உடமைகள் பற்றிய விவரங்களை காண்பிக்க _________ புவிப்படங்கள் பயன்படுகின்றன.

**காணி**

39) "கெடஸ்ட்ரல்" எனும் வார்த்தை ________ மொழியிலுள்ள "கெடஸ்டர்" எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டது.

**பிரெஞ்சு**

40) நிழற்பட்டைப்படம் என்பது ஒரு ________ படமாகும்.

**கருத்து**

41) ___________ என்பது முழுப்புவியையோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ குறிப்பதாகும்.

**பதில் :** புவிப்படம்

42) புவியின் வடிவிலான ஒரு சிறிய தோற்றம் _____________

**பதில் :** புவி மாதிரி

43) புவிப்படங்களைக் கற்றறிதல் மற்றும் புவிப்பட உருவாக்க நுணுக்கங்கள் பற்றி விளக்கும் பாடப்பிரிவு __________ எனப்படும்.

**பதில் :** புவிப்படவியல்

44) புவிப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கம் குறித்து கூறுவது __________ ஆகும்.

**பதில் :** தலைப்பு

45) வரைகலை அளவை என்பது ஒரு சிறிய __________ போன்று வரைபடத்தின் அடிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**பதில் :** வரைக்கோல்

46) புவிப்படத்தில் பல்வேறு தோற்றங்களைக் குறிப்பிடுவதற்கு ___________ மற்றும் _________ பயன்படுத்தப்படுகின்றன.

**பதில் :** புவிப்படக் குறியீடு மற்றும் சின்னங்கள்

47) காணிப்புவிப்படங்கள் __________ பதிவிற்கான ஆவணங்களாக பயன்படுத்தப்படுகின்றன.

**பதில் :** பொது

48) கெடஸ்ட்ரல் என்பதன் பொருள் _________

**பதில் :** காணிப்புவிப்பட பதிவேடு

49) பொதுவாக வரையப்படும் புவிப்படங்கள் ஒரு __________ விரிவாக வெளிப்படுத்துவதில்லை.

**பதில் :** குறிப்பிட்ட கருத்தை

50) _________ படம் என்பது ஒரு கருத்துப்படமாகும்.

**பதில் :** நிழற்பட்டைப்